3. அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின்கீழ் 1971-72-ஆம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும். " என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(1) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றைமாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதி முறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழுவிற்கு (Estimates Committee) உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 1—4—1971, வியாழக்கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 1—4—1971 வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2—4—1971, வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப் பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதி னாறுக்கு மேற்படுமாயின், 3—4—1971, சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய் வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(3). அரசினர் தீர்மானங்கள் தொடர்ச்சி.

(ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு சட்டப் பேரவையின் 173-வது விதியின்கீழ் 1971-72-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்." என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.